தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 30.06.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - பட்டயப்படிப்பு விண்ணப்பம் சமர்ப்பித்தற்கான கடைசி தேதி நீட்டிப்பு

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும்பட்டயப்படிப்புகள்:**

இந்த கல்வியாண்டில் வேளாண்மை (ஆங்கில வழி), வேளாண்மை (தமிழ் வழி) தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் ஆகிய பட்டயப்படிப்புகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி தேதி 01.07.2023 ஆக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இணையதளம் மூலமாக பட்டயப்படிப்புகளுக்கான (Diploma) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டு வருகிறது. ஆகையினால் வேளாண்மை (ஆங்கில வழி), வேளாண்மை (தமிழ் வழி) தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் ஆகிய பட்டயப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வசதியாக இணையதளம் மூலமாக விண்ணப்பித்தை பதிவேற்றுவதற்கான கடைசி தேதி 15.07.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள் www.tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 0422-6611345, 0422-6611346, 9488635077, 9486425076 என்ற தொலைபேசி உதவிச் சேவை எண்களிலும் ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அறிந்துகொள்ளலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**